# தேவனுடைய அரசில் வாழ்தல்

Transcribed from a message spoken in February 28, 2016 in Chennai

By *R.S.Milton*

## தேவனுடைய சாயலில் மனிதன்

“இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற மக்கள் எதற்காக அவரை விசுவாசிக்கிறார்கள்? இயேசு கிறிஸ் துவை விசுவாசிக்கிற மக்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கின்றார்கள்?” என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். “ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எதற்காக இந்த உலகத்திற்கு வந்தார்? மனிதர்களுக்கு, நமக்கு, உங்களுக்கு என்ன செய்திருக்கிறார்?” என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்து இங்கு கூடியிருக்கிற ஒவ்வொருவருக்காகவும் ஒரு மாபெரும் திட்டத்தை வைத்திருக்கிறார்; அந்தத் திட்டத்தில் அவருடைய பங்கை அவர் செய்து முடித்துவிட்டார். அல்லே லூயா! உங்களுடைய பங்கை நீங்கள் நிறைவேற்றினால் தேவனுடைய அந்த மாபெரும் திட்டம் உங்கள் வாழ்க்கையிலே நிறைவேறும். அது உங்களுக்கு மிகப் பெரிய நன்மையாகவும், ஆசீர்வாத மாகவும் இருக்கும். வானத்தையும், பூமியையும், பிரபஞ்சத்தையும் படைத்த தேவன் மண்ணினால் உண்டாக்கப்பட்ட மனிதர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் ஓர் அருமையான, அற்புதமான, திட் டத்தை வைத்திருக்கிறார். இதை உங்களால் நம்ப முடிகிறதா?

இவ்வளவு பெரிய தேவன்! சங்கீதத்திலே இப்படி இரண்டு வசனங்கள் உண்டு. ஒரு வசனம் “மிகப் பெரிய விலங்குகளுக்கும் அவர் உணவு அளிக்கிறார்,” என்று எழுதியிருக்கிறது. இன்னொரு வசனம் “மிகச் சிறிய பறவைகளுக்கும் அவர் உணவு அளிக்கிறார்,” என்று எழுதியிருக்கிறது. முதல் வசனம் சொல்கிறது: அங்கே அவர் உணடாக்கின அந்த சமுத்திரத்திலே திமிங்கலங்கள் விளையாடும். அவர் தம் கைகளைத் திறக்க அவைகள் திருப்தியாகும். அவர் தம்முடைய கைகளை மூடிக்கொண்டால் அவைகள் மாண்டு, மண்ணுக்குத் திரும்பும். “இந்தக் கடலிலே விளையாடும் திமிங்கலத்திற்கெல்லாம் கடவுள் உணவு அளிக்கிறார்,” என்று அந்த வசனம் சொல்கிறது அதேபோல் சங்கதீத்திலே இன் னொரு வசனம் சொல்கிறது: அவர் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கு ஆகாரம் கொடுக்கிறார். நீங்கள் யோசித்துப் பாருங்கள். நிர்க்கதியாயிருக்கிற காக்கைக் குஞ்சுகள். அவைகள் ஏன் குஞ்சுகள் என்றால் அவைகளால் எங்கும் பறந்துபோய் உணவையெல்லாம் பெற முடியாது. அப்படிப்பட்ட காக்கைக் குஞ்சுகளுக்கும் அவர் ஆகாரம் கொடுக்கிறார். ஆகவே, இப்படி திமிங்கலங்களுக்கும், காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிற தேவன் மனிதர்களைப்பற்றி மிகுந்த அக்கறையும், திட்டமும் உள்ளவராக இருக்கிறார்.

ஏனென்றால், மற்ற விலங்குகள், பறவைகள், மீன்கள், ஊர்வன இவை எல்லாவற்றோடும் ஒப்பிடும் போது மனிதன் மிகவும் சிறப்பானவன். ஏனென்றால் மனிதன் மட்டுமே தேவனுடைய சாயலிலே உண்டாக்கப்பட்டவன். மற்ற விலங்குகள், பறவைகள், மீன்கள் எல்லாம் தேவனுடைய சாயலிலே உண்டாக்கப்பட்டதல்ல. மனிதர்கள் மிகவும் விசேஷித்தவர்கள். ஏன்? அவர்கள் கடவுளின் சாயலிலும், உருவத்திலும் உண்டாக்கப்பட்டவர்கள்.

நான் சொல்வதை நீங்கள் நன்றாய்க் கவனித்து கொள்ளவேண்டும் ஏனென்றால், இது உங்களுடைய வாழ்க்கையிலே பெரிய மாற்றத்தை உண்டுபண்ணும். நாம் ஏதோவொரு மூடநம்பிக்கையின் காரண மாக இயேசுகிறிஸ்துவை தேவன் என்றும் இரட்சகர் என்றும் பின்பற்றவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உண்மையாகவே தேவனும் மனிதனுமாக இருக்கிறார்.

அவர் மனிதர்களாகிய நமக்காக ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அந்தத் திடடத்தில் அவர் தம் பங்கை ஒரு பெரிய விலைசெலுத்தி செய்துமுடித்திருக்கிறார். நம்முடைய பங்கு சிறிய பங்கு, அவ ருடைய பங்கு பெரிய பங்கு. நம்முடைய சிறிய பங்கை நாம் நிறைவேற்றினால் கடவுளுடைய திட்டம் நம்முடைய வாழ்க்கையிலே நடைபெறும். நம்முடைய சிறிய பங்கை நாம் நிறைவேற்ற வில்லை என்றால் கடவுளுடைய அற்புதமான பங்கு நம்முடைய வாழ்க்கையிலே நடைபெறாது.

## பரலோக இராஜ்ஜியம்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே வாழ்ந்தபோது மனிதர்களை அழைத்தார். “மனி தர்கள் தங்கள் சித்தம்போல, விருப்பம்போல, எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்துவிடலாம்,” என்று விடவில்லை. அவர் மனிதர்களை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி அழைத்தார். இயேசுகிறிஸ்து மனிதர்களை முதலாவது அழைத்தது எதற்காக? இயேசுகிறிஸ்து மனிதர்களுக்கு விடுத்த முதலாவது

அழைப்பு என்ன? இயேசுகிறிஸ்து தம்முடைய பொது ஊழியத்தைத் தொடங்கினபோது மனிதர்களுக்கு அவர் விடுத்த அழைப்பு என்ன? “மனந்திரும்புங்கள்; பரலோகராஜ்ஜியம் (அல்லது) தேவனுடைய இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது”. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தை, பரம இராஜ்ஜியத்தை, கொண்டுவந்தார். இயேசுகிறிஸ்து வருகின்றவரை தேவனுடைய .இராஜ்ஜியம் அல்லது பரலோக இராஜ்ஜியம், பரம இராஜ்ஜியம், என்பது அது அருகில் இல்லை. ஆனால், இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு மனிதனாய் வந்தபோது அவர் தேவனுடைய இராஜ்ஜியத்தை, பரம இராஜ்ஜியத்தை, மிக அருகில் கொண்டுவந்து விட்டார். கொண்டு வந்து அவர் அவர்களை அழைக்கிறார். “நீங்கள் உங்கள் மனதை அல்லது உங்கள் எண்ணங்களை, சிந்தனைகளை, மாற்றிக்கொள்ளுங்கள். மாற்றிக்கொண்டு தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள், பரம இராஜ்ஜியத்திற்குள், நீங்கள் நுழைந்து, தேவனுடைய அந்த இராஜ்ஜியத்தில் அல்லது பரம இராஜ்ஜியத்தில் வாழுங்கள்,” என்று அவர்களுக்கு ஓர் அழைப்பு விடுத்தார்.

## நாடுவிட்டு நாடு குடிபெயர்தல்

இதுதான் இயேசுகிறிஸ்து மனிதர்களுக்கு விடுத்த முதல் அழைப்பு. “நீங்கள் இந்தப் பூமிகுரிய இராஜ்ஜியத்தில் வாழ வேண்டாம். அற்புதமான தேவனுடைய இராஜ்ஜியம் என்று ஒன்று இருக்கிறது. அதை நான் உங்களுக்கு மிக அருகில் கொண்டுவந்து விட்டேன். இப்பொழுது நீங்கள் தேவனுடைய இந்த இராஜ்ஜியத்தில் வாழலாம். உங்கள் மனதை மாற்றிக்கொண்டு, தேவனுடைய இராஜ்ஜியத்தில் நுழைந்து வாழுங்கள்,” என்று அழைப்பு விடுத்தார். இது நமக்கு நன்றாய் விளங்குகிறதா?

பலர் நம்முடைய நாட்டிலிருந்து வேறு பல நாட்டிற்கு வேலை பார்க்க செல்வார்கள். இல்லையா? அரபு நாடுகளுக்குச் செல்வார்கள் அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் செல்வார்கள். எதற்காக அந்த வேறு நாடுகளுக்குச் செல்கிறார்கள்? ஏன் இந்தியாவிலேயே இருந்தால் என்ன? வேலைக்காகவோ அல்லது குடிபெயர்ந்தோ போவதற்குக் காரணம் உண்டு. அங்கு அதிக சம்பளம் தருவார்கள், இந்தியாவிலே வேலை கிடைக்காது, அங்கு சௌகரியமாக வாழலாம், எதிர்காலம் நன்றாக இருக்கும், எதிர்காலம் நன்றாக இருக்கும் என்றால் என்ன அர்த்தம்? “எது கிடைத்தால் என்னுடைய எதிர்காலம் நன்றாக இருக்கிறது,” என்று சொல்வீர்கள்? நல்ல வளங்களும் செல்வங்களும் இருக்க வேண்டும். இல்லையா? வேலை இருக்க வேண்டும். வேலை இருந்தால் வருவாய் இருக்கும். செல்வங்களும், வளங்களும் .இருக்கும். அந்த நாட்டிலே நல்ல சட்டதிட்டங்கள் உள்ளன. இலஞ்சம், ஊழல் செய்து ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டிய அவசியமில்லை. ரோட்டில் எல்லாரும் சாலை விதிகளைப் பின்பற்றுவார்கள். அந்த நாட்டிலே நல்ல நாகரிகமும், நல்ல பண்பாடும் உண்டு. இப்படி இருக்கிறதினால் ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டிற்கு குடிபெயர்ந்து போகிறோம். இல்லையென்றால் எல்லாரும் நம் நாட்டிலேயே இருந்துவிடலாம். அங்கு நல்ல வேலை கிடைக்கிறது, வருவாய் இருக்கிறது, வளங்களும் செல்வங்களும் இருக்கிறது. ஆகவே, நாம் அந்த நாட்டிற்குப் போகிறோம்.

“யாரெல்லாம் இந்த நாட்டிற்கு வர விரும்புகிறீர்களோ, நீங்களெல்லாம் வரலாம்,” என்று ஒரு திட்டத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் போவோமா, போகமாட்டோமா? நாம் முரண்டு பிடிப்போமா அல்லது உடனடியாகப் போவோமா? “நான் வரமாட்டேன். எங்கள் நாட்டிற்கு என்ன குறை?” என்று சொல்வோமா? புகை, மாசு, தூசு இவைகளின் காரணமாக எண்பது வயதுவரை வாழ முடிந்தவர்கள் நம் நாட்டிலே எழுபது வயது அல்லது அறுபது வயதுவரைதான் வாழ முடியும். அதுவும் அந்த வாழ்க்கை, நோயும் நொடியும் மிகுந்த வாழ்க்கையாக மாறிவிடுகிறது. ஆனால், இன்னொரு நாட்டிலே இந்த மாதிரி தூசு, மாசு, புகை எல்லாம் இல்லை என்று வைத்துக்கொள்வோம். ஆஸ்துமா இருப்பவர்கள்கூட நன்றாய் வாழலாம் என்றால் நாம் அந்த நாட்டிற்கு உடனே போவோமா, போகமாட்டோமா?

## பரலோக இராஜ்ஜியம்

அதேபோல்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார். “நீங்கள் பூமிக்குரிய ஒரு இராஜ்ஜியத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால், இதைவிடப் பலமடங்கு அற்புதமான, உன்னதமான ஒரு இராஜ்ஜியம், தேவனுடைய இராஜ்ஜியம், பரம இராஜ்ஜியம் இருக்கிறது. அதில் நீங்கள் வாழ விரும்புகிறீர்களா?” என்று அவர் கேட்கிறார். இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்தோடு ஒப்பிடும்போது தேவனுடைய இராஜ்ஜியம், பரம இராஜ்ஜியம், பலகோடி மடங்கு மேலானது. ஏனென்றால், இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்தின் தலைவன் சாத்தான். தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆளுகை செய்கிறவர், தேவன். தேவன் அன்புள்ளவர், தேவன் நீதியுள்ளவர், தேவன் பரிசுத்தமுள்ளவர், தேவன் ஒளியாயிருக்கிறவர், தேவன் பொறுமை நிறைந்தவர், தேவன் சாந்தமுள்ளவர், தேவன் மன்னிக்கிற

வர், அப்படிப்பட்ட ஒரு இராஜ்ஜியத்தில் வாழ நாம் விரும்புவோமா அல்லது எங்கு அன்பு இல் லையோ, எங்கு நீதி இல்லையோ, எங்கு பரிசுத்தம் இல்லையோ, எங்கு பொறுமை இல்லையோ, எங்கு சாந்தம் இல்லையோ, எங்கு மன்னிப்பு இல்லையோ அப்படிப்பட்ட ஒரு இடத்தில் வாழ விரும்புவோமா?

நாட்டை விடுவோம். வேலை பார்க்கிற இடத்தை எடுத்துக்கொள்வோம். நீங்கள் எப்படிப்பட்ட இடத் தில் வேலை பார்க்க விரும்புவீர்கள்? எங்கு அன்பு இருக்கிறதோ, நீதி இருக்கிறதோ, ஒளி இருக் கிறதோ, பரிசுத்தம் இருக்கிறதோ, சாந்தம் இருக்கிறதோ, பொறுமை இருக்கிறதோ அப்படிப்பட்ட ஓர் அதிகாரியின்கீழ் வாழ விரும்புவீர்களா அல்லது அன்பில்லாத, அநீதியான, அசுத்தமான, பொய்கள் சொல்கின்ற, மன்னிக்காத ஓர் அதிகாரியின்கீழ் வாழ விரும்புவீர்களா? யார்கீழ் நீங்கள் வேலை செய்ய விரும்புவீர்கள்?

சாத்தான் இந்தப் பூமியின் அதிபதியாக, பூமியை ஆள்கின்ற அதிபதியாக, இருக்கின்றான் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார். "சாத்தானுடைய அரசாட்சி நடைபெறுகின்ற இந்தப் பூமி யின் இராஜ்ஜியத்தில் நீங்கள் வாழலாம். ஆனால், நான் அற்புதமான தேவனுடைய இராஜ்ஜியத்தை கொண்டுவந்திருக்கிறேன். அங்கு, தேவன் அரசாட்சி செய்கிறார். தேவன் அங்கு அரசராக இருக் கிறார்," என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார். இவருடைய அரசாட்சியின் கீழே அன்பு உண்டு, நீதி உண்டு, பரிசுத்தம் உண்டு, ஒளி உண்டு, மன்னிப்பு உண்டு.

தேவனுடைய .இராஜ்ஜியம் எப்படிப்பட்டது என்று வேதத்திலே நாம் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட இராஜ்ஜியம் இருக்கும்போது நீங்கள் ஏன் அப்படிப்பட்ட இராஜ்ஜியத்தில் வாழ வேண்டும்? எனவே, உங்கள் மனதை நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள். "எங்கள் முன்னோர்களெல்லாம் இந்த இராஜ்ஜியத் தில்தான் வாழ்ந்தார்கள். சாத்தான் அரசாட்சிசெய்கிற பூமிக்குரிய இராஜ்ஜியத்தில்தான் வாழ்ந்தார்கள். ஆகவே, நாங்களும் தொடர்ந்து இந்த இராஜ்ஜியத்திலேயே வாழ்ந்து, எங்கள் வாழ்க்கையை முடித்துவிடுவோம்," என்ற மனநிலையில் இருக்க வேண்டாம். மனந்திரும்புங்கள் என்றால் நீங்கள் யோசிக்கிற விதத்தை, எண்ணுகிற விதத்தை, சிந்திக்கிற விதத்தை மாற்றிக்கொள்ளுங்கள் என்று பொருள். உங்கள் மனதை, உங்கம் எண்ணத்தை, உங்கள் சிந்தனையை நீங்கள் மாற்றிக்கொள் ளும்போது, தேவனுடைய இராஜ்ஜியத்தில் நீங்கள் நுழைய முடியும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ முடியும்.

இந்த தேவனுடைய இராஜ்ஜியம் எப்படிப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள ஒரு சில பகுதிகளை நான் வாசிக்க விரும்புகிறேன். "ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படா திருங்கள். ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக் கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதும் இல்லை. அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படு கிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை. நூற்கிறதுமில்லை என்றாலும் சாலோமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்கிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட் டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சய மல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். இவை களெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல் லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள். நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" *(மத் 6:25-34).*

## தேவனுடைய அன்பின் பராமரிப்பு

தேவனுடைய இராஜ்ஜியம் எப்படிப்பட்டது என்பதற்கு முன்சுவையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பகுதியிலே சொல்கிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவன் நம்முடைய தந்தையாக, நம் முடைய பிதாவாக, இருக்கிறார் என்றால் இந்த இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற எல்லாரும் அந்தப் பிதா

வாகிய தேவனுடைய அன்பின் பராமரிப்பின்கீழ் வாழ்கின்றார்கள். இது ஏதோவொரு கற்பனையான இராஜ்ஜியத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து பேசவில்லை. இது ஒரு உண்மையான இராஜ்ஜியம். இந்த இராஜ்ஜியம், நாம் தமிழ்க கதைகளில் வாசிப்பதுபோல ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி ஒரு குகை இருக்கும்; அங்கு இருக்கிறது என்று நீங்கள் கற்பனை செய்ய வேண்டாம். “இதோ! தேவனுடைய இராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறதே,” (லூக்கா 17:21) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். “தேவனுடைய இராஜ்ஜியம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, அங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவாயிராது. இதோ, தேவனுடைய இராஜ்ஜியம் உங்களுக்குள்ளே இருக்கிறதே!” உங்கள் நடுவே இருக்கிறது என்று சொல்கின்றார்.

என்னுடைய முதலாவது குறிப்பு, தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிரதானமான பண்பு என்ன, குணம் என்ன, என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உலகத்து இராஜ்ஜியத்திலும் மக்கள், மனிதர்கள், வாழலாம். தேவனுடைய இராஜ்ஜியத்திலும் வாழலாம். இந்தப் பகுதியிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தின் இராஜ்ஜியத்திலே வாழ்கின்ற பெரிய மக்களோடு தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற மக்களை ஒப்பிடுகிறார். உலகத்து இராஜ்ஜியத்திலே உணவைப்பற்றி, உடையைப் பற்றி, உறைவிடத்தைப்பற்றி மிகவும் கவலைப்படுவார்கள். அதற்காக அவர்கள் உழைப்பார்கள். தேவைப்பட்டால் அவர்கள் போராடுவார்கள். அதற்கும் அதிகமாகத் தேவைப்பட்டால் பொய்கள், புரட்டுகள், பித்தலாட்டங்கள், கொலைகள், களவுகள் செய்வார்கள்.

“உணவு, உடை, உறைவிடம்,” என்று சொல்வோம். ஆனால், அதற்காக மண்ணைக் கொள்ளையடிப்பார்கள்; கிரானைட் கற்களைக் கொள்ளையடிப்பார்கள்; கொலைசெய்வார்கள். ஏதற்காகவென்றால் மற்ற மனிதர்களுக்கு இருப்பதைவிட அதிகமான உறைவிடம் வேண்டும், வீடு வேண்டும், நல்ல உடைகள் வேண்டும், நல்ல உணவு வேண்டும் என்பதற்காக அல்லது தனக்கு இருக்கின்ற சொத்துக்களையும், சுதந்தரத்தையும் பாதுகாப்பதற்கு தனக்கு செல்வாக்கும், அதிகாரமும் வேண்டும் என்பதற்காக. எல்லா மனிதர்களுடைய பிரச்சினைகளும் இங்கிருந்துதான் தோன்றின என்று பவுல் கூறுகிறார். “ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனிதரைக் கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளினாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்,” *(1 தீமோ. 6:9-10)* என்று தேவனுடைய வார்த்தை மனிதனுடைய பிரச்சினையை அலசி ஆராய்ந்து, பகுத்துக் காட்டுகிறது. மனிதனுடைய கோபங்கள், சண்டைகள், சச்சரவுகள், களவுகள், கொலைகள், பொய்கள், புரட்டுகள், பித்தலாட்டங்கள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன என்றால் “எப்படியாவது நான் பணத்தைச் சேகரிக்க வேண்டும். நல்ல உணவு, நல்ல உடை, நல்ல உறைவிடம், செல்வாக்கு, அதிகாரம், பாதுகாப்பு எனக்கு வேண்டும். பாதுகாப்பு இல்லையென்றால் யாராவது என்னிடத்தில் இருக்கின்ற என்னுடைய உணவு, என்னுடைய உடை, என்னுடைய உறைவிடம், என்னுடைய நிலம், என்னுடைய புலம், வீடு ஆகிகவைகளையெல்லாம் பறித்துக்கொண்டு போய்விடுவார்கள் ஆகவே எனக்குப் பாதுகாப்பு வேண்டும். பாதுகாப்பு வேண்டுமென்றால் செல்வாக்கு வேண்டும்,” என்று ஒரு உலகத்தையே அவர்கள் பின்னிப் பிணைத்துக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள். இது உலகத்தின் இராஜ்ஜியம்.

## தேவன் நம் அன்புத் தந்தை

“.இந்த உலகத்தின் இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற மனிதர்களோடு தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற மனிதர்களை நீங்கள் ஒப்பிட்டுப்பாருங்கள்,” என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார். பறவைகளைப்பற்றிச் சொல்கிறார். “அவைகள் விதைப்பதும் இல்லை, அறுப்பதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைப்பதும் இல்லை. அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்,” என்று சொல்லும்போது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, “நீங்களெல்லாம் வேலைக்குப் போகாமல் காலையில் பத்து மணிக்கு எழுந்து, பல் தேய்க்காமல் கா.ஃ.பி குடித்துவிட்டு, செய்தித்தாள் வாசித்துவிட்டு, ஹாயாக கட்டிலில் போய் படுத்துவிட்டு, மதியம் எழுந்து மறுபடியும் மதிய உணவு சாப்பிட்டுவிட்டு, அப்புறம் மதியம் ஒரு தூக்கம் தூங்குங்கள்,” என்று சொல்லுகிறார் என்று நீங்கள் யாராவது புரிந்துகொள்ளுகிறீர்களா? அப்படி நாம் புரிந்துகொள்ளவில்லை. இயேசுகிறிஸ்துவைப்போல் கடின உழைப்பாளி யாரும் இல்லை. பறவைகளெல்லாம் அப்படியே காலையிலே எழுந்து பல் தேய்க்காமல் கா.ஃ.பி குடித்துவிட்டு அப்புறம் தெருவில் போய்ப் படுத்துக்கொள்கிறதா? எந்தப் பறவையாவது மரத்தில் மல்லாந்து படுத்துக்கொண்டு, யாராவது வாயிலே கொண்டு இரையைப் போடுவார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதா? அப்படி எந்தப் பறைவையையாவது

நீங்கள் பார்திருக்கிறீர்களா? பறவைகளெல்லாம் சுறுசுறுப்பாக வேலை செய்கிறதா, இல்லையா? பறந்துபறந்து போகின்றன. ஆனால், எந்தப் பறவையும் கவலையோடு மரத்தில் உட்கார்ந்திருப்ப தில்லை. "நாம் இந்தியாவில் இருக்கிறோமே. அமெரிக்காவில் இருந்தாலாவது நல்ல சாப்பாடு கிடைக்கும்! இந்தியாவில் நல்ல சாப்பாடு கிடைக்குமா? இங்கு காக்கைளின் எண்ணிக்கை அதிகம். ஒரேவொரு சோற்றுப்பருக்கைக்கு நூறு காக்கைகள் போட்டிக்கு வருகின்றன. நம்முடைய குஞ்சு களுக்கெல்லாம் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ?" என்றெல்லாம் காக்கைகள் கவலைப் படுகின்றனவா?

தேவனுடைய இராஜ்ஜியம் எப்படிப்பட்டதென்றால் நாம் அங்கே உழைப்போம்; ஆனால், ஒருநாளும் நாம் கவலையிலும், பயத்திலும், நடுக்கத்திலும், அச்சத்திலும், பதற்றத்திலும் வாழ்கின்ற மனிதர் களாய் இருக்க மாட்டோம். கடவுள் என்று ஒரு பொய்யான கற்பனையை வழிபடுகின்ற மனிதர் களைப் பாருங்கள். அவர்களுக்கு எப்போதுமே கவலை இருக்கும், பயம் இருக்கும், நடுக்கம் இருக் கும், பதற்றம் இருக்கும், திகில் இருக்கும். அவர்கள் கடவுளை அணுகி, அந்தக் கடவுளை வழிபடு வதுகூட "ஏதாவது ஆபத்து எங்களுக்கு வந்துவிடுமோ?" என்ற பயம்!

நாம் கண்டிப்பாய்த் தேவனிடத்தில் ஜெபிக்கலாம். "ஆண்டவரே, எந்த ஆபத்தும் எங்களுக்கு நடை பெறக்கூடாது," என்று ஜெபிக்கலாம். ஜெபிக்க வேண்டுமென்றே கர்த்தர் கற்றுக்கொடுக்கிறார். ஆனால், உண்மையாகவே கடவுளைப்பற்றிய ஒரு மெய்யான அறிவும் அல்லது பொய்யான அறிவும் உள்ளவர்களுக்கு உள்ள வேறுபாடு என்னவென்றால் கடவுளைப்பற்றிய ஒரு பொய்யான அறிவு அல்லது ஒரு கற்பனை அல்லது ஒரு புரட்டு, புனைகதை உள்ளவர்கள் எப்போதும் கவலையிலும், அச்சத்திலும், பதற்றத்திலும், நடுக்கத்திலும், திகிலிலும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். எதிர்காலத்தை நினைக்கும்போது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்காது. எதிர்காலத்தை நினைக்கும்போது கவலை யும், அச்சமும், பதற்றமும், திகிலும், நடுக்கமும் இருக்கும். "நம்முடைய பிள்ளைகளெல்லாம் எப்படி வாழ்வார்களோ?" என்ற அச்சம் இருக்கும். "இனிமேல் நிலமெல்லாம் வாங்க முடியாது. நிலத்தி னுடைய விலையெல்லாம் எங்கேயோ போய்விட்டது. அதனால் நமக்கு வீடெல்லாம் கட்ட முடி யாது," என்பதுபோன்ற பலவிதமான பயங்களிலும், அச்சங்களிலும், நடுக்கத்திலும், பதற்றத்திலும் அவர்கள் வாழ்வார்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவன் அரசராக இருக்கின்றார், தேவன் அரசாட்சி செய்கிறார். அவ ருடைய அரசாட்சியின்கீழ் வாழும்போது தேவன் நமக்குப் பொறுப்புகளைக் கொடுப்பார். நாம் அந் தப் பொறுப்புகளை நிறைவேற்றுவோம். நாம் அங்கு வேலை செய்வோம். நாம் அங்கு உழைப் போம். ஆனால், ஒருநாளும் தேவனுடைய இராஜ்ஜியத்திலே மக்கள் பதற்றத்தோடும், பயத்தோடும், கவலையோடும் வாழ்வது இல்லை.

பிறகு சொல்கிறார்: சாலொமோனைப் பாருங்கள். இந்த உலகத்தின் இராஜ்ஜியத்தைப் பொறுத்த வரை சாலொமோன் என்பவன் ஒரு மாபெரும் அரசன், ஞானி, செல்வமுடையவன், செல்வாக் குடையவன். அவனைப்போல ஒரு ஞானி, அரசன் இஸ்ரயேலிலே அவனுக்கு முந்தியும் வாழ்ந்த தில்லை, அவனுக்குப் பிந்தியும் வாழ்ந்ததில்லை. அவனுடைய உடையைப் பாருங்கள். ஒரு இராஜா வினுடைய உடையைப்போல அது எப்படி இருக்கிறது பாருங்கள்! ஆனால் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற ஒரு புல்லைப் பாருங்கள். அந்தப் புல்லுக்கு ஒரு அழகான பூ. அந்தப் பூவைப் பார்த்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார். தேவன் அந்தப் புல்லுக்கு உடுத்துவிக்கிற உடை எவ்வளவு அழகாயிருக்கிறது!

மனிதர்களெல்லாம் உடை உடுத்தி, அலங்காரம் செய்து தங்களை அலங்கரிப்பதற்காக எவ்வளவோ பாடுபடுகிறார்கள். ஆனால், தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற புல் முதற்கொண்டு, காக்கைக்குஞ்சுமுதற்கொண்டு திமிங்கலம்வரை தம்முடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற எல்லா வற்றிற்கும் அன்பின் பராமரிப்பைக் கொடுக்கிறார். அது ஒரு உதாரணம்தான். இந்தப் புல் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதைப்போல அல்லது காகங்கள் இவைகளெல்லாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதைப்போல மனிதர்களாகிய நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் வாழ முடியும். வாழ்வதற்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வழிவகை செய்திருக்கிறார். நீங்கள் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் வாழ விரும்புகிறீர்களா? என்பதுதான் கேள்வி.

ஆகவே, "என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கேட்கா மலும், கவலைப்படாமலும் இருங்கள்," என்று சொல்லுகிறார். இங்கு "கவலைப்படாமலிருங்கள்," என்று எழுதியிருக்கிறது. லூக்காவிலே "என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என் னத்தை உடுப்போம் என்று கேட்காமலும் இருங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேட்காமலும்

என்றால் சில சமயங்களில் நீங்கள் பயணம் செய்து பார்த்தால் மனிதர்களுடைய வாழ்க்கை, இந்த உலகத்தின் இராஜ்ஜியம், எப்படி இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம். தாம்பரத்தில் ஏறின வுடனே அவர்கள் சில தலைப்புகளைப்பற்றி பேச ஆரம்பித்துவிடுவார்கள் அரசியலைப்பற்றிப் பேசு வார்கள், நிலத்தைப்பற்றிப் பேசுவார்கள், திருமணத்தைப்பற்றிப் பேசுவார்கள், பள்ளிக்கூடத்தைப் பேசுவார்கள், கல்லூரியைப்பற்றிப் பேசுவார்கள். ஏறக்குறைய மனித வாழ்க்கையினுடைய எல்லா அம்சங்களைப்பற்றிப் பேசுவார்கள். ஆனால், அவர்கள் பேசும்போது கவலையும், சந்தேகமும், பய மும், நடுக்கமும், திகிலும்தான் இருக்கும். "நான் அங்கே ஒரு நிலத்தை வாங்கிப்போட்டேன்," என்று சொல்வார்கள். "என் பையனை இந்த பள்ளிக்கூடத்திலே படிக்க வைத்தேன்," என்று சொல்வார்கள். "என் பெண்ணுக்கு அங்கே ஒரு மாப்பிள்ளை பார்த்தேன்," என்று சொல்வார்கள். எல்லாமே இதே மாதிரிதான் இருக்கும். சந்தேகங்கள், கவலைகள், பயங்கள், நடுக்கங்கள், பதற்றங்கள். ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்து "நீங்கள் இப்படி சந்தேகப்படாமலும், பயப்படாமலும், கேட்காமலும் இருங் கள்," என்று சொல்கிறார். "இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். ஆகையால், நீங்கள் முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவ ருடைய நீதியையும் தேடுங்கள்".

## தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வது

கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், யாரென்றால் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்றவர்கள். நாம் இந்த உலகத்தின் இராஜ்ஜியத்தில் வாழாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதற்கு தீர்மானம் எடுத்தவர்கள். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதை நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய இராஜ்ஜியம் என்று நான் சொல் வது அன்பு, நீதி, பரிசுத்தம், உண்மை, ஒளி, மன்னிப்பு ஆகியவைகள் நிறைந்த தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதை நீங்கள் தெரிந்தெடுத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

நாம் இந்த உலகத்தின் தேவைகளை இரண்டு இராஜ்ஜியங்களில் வாழ்வதன்மூலம் பெற்றுக்கொள்ள லாம். ஒன்று இந்தத் தேவைகளை-உணவு, உடை உறைவிடம்-அல்லது ஒரு மனித வாழ்க்கையின் எல்லாத் தேவைகளையும்-ஒரு கல்யாணம், ஒரு காட்சி-எல்லாவற்றையும்-நாம் இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்தில் வாழ்ந்தும் பெறலாம், தேவனுடைய இராஜ்ஜியத்திலும் பெறலாம். இந்தப் பூமிக் குரிய இராஜ்ஜியத்தின் அதிகாரியாகிய சாத்தானுடைய தந்திரம், சூழ்ச்சி என்னவென்று கேட்டால் "நீ இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்தில், உலகத்தின் இராஜ்ஜியத்தில், வாழ்ந்தால்தான் இவைகளெல் லாம் உனக்குக் கிடைக்கும்," என்று அவன் சொல்வான். "பாவம் செய்ய வேண்டும், சண்டை போட வேண்டும், சச்சரவுகள் இருக்க வேண்டும், பொய், பித்தலாட்டம், கொலை, களவு இவைகளெல்லாம் இருக்கத்தான் செய்யும். இருந்தால்தான் நீ இந்த உலகத்திலே இந்த நன்மைகளைப் பெற முடியும்," என்பது அந்த இராஜாவினுடைய கருத்து. ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார்: இவைகளெல்லாம் அவசியமில்லை. இவைகளெல்லாம் இல்லாமல் இந்த மனித வாழ்க்கையின் எல்லா நன்மைகளையும் பெற முடியும்.

எப்படிப்பட்ட வாழ்க்கையை நீங்கள் விரும்புகிறீர்கள்? நாம் எப்படி இந்த மனித வாழ்க்கையின் நன்மைகளைப் பெற விரும்புகிறோம்? இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்தின் வழிகளைப் பின்பற்றியா? தேவனுடைய இராஜ்ஜியத்தின் வழிகளைப் பின்பற்றியா? தேவனுடைய இராஜ்ஜியத்தின் வழிகளைப் பின்பற்றிதான் நாம் வாழ விரும்புகிறோம்.

## தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் நுழைதல்

இரண்டாவது, இந்த தேவனுடைய இராஜ்ஜியத்தில் எப்படி நுழைவது? இப்படி ஒரு இராஜ்ஜியம் இருக்கிறது. இப்போது நான் சொன்னது என்னவென்றால் சவுதி அரேபியாபோன்ற ஒரு நாடு இருக்கிறது, அமெரிக்காபோன்ற ஒரு நாடு இருக்கிறது. அதுபோல, தேவனுடைய இராஜ்ஜியம் என்ற ஒரு நாடு இருக்கிறது.

நான் ஒரு பழைய இலக்கியத்தில் இப்படிப் படித்திருக்கிறேன்.

கள்வர் இல்லாமல் பொருள் காவலும் இல்லை,
கொள்வர் இல்லாமல் கொடுப்பார் இல்லை மாதோ!

அந்த நாடு எப்படிப்பட்ட நாடாம்? கள்வர்கள் இல்லாததால் யாரும் வீடுகளையெல்லாம் பூட்டுவதே இல்லையாம். எல்லாம் திறந்துதான் இருக்குமாம். அந்த நாட்டிலே பணத்தைக் கொடுத்தால்கூட

யாரும் வாங்கமாட்டார்களாம். அதனால் கொடுப்பதற்கு யாருமே இல்லையாம். அப்படிப்பட்ட ஒரு வளமான நாடு. இலக்கியம்தானே! நாம் கற்பனைசெய்து கொள்ளலாம்.

தேவனுடைய இராஜ்ஜியம் என்பது இப்படிப்பட்ட ஒரு இராஜ்ஜியம். "தேவனுடைய ராஜ்ஜியம் புசிப்பும் குடிப்புமல்ல; அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது," (ரோமர் 14:17) என்று நாம் வாசிக்கிறோம். தேவனுடைய இராஜ்ஜியம் நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் வரும் சந்தோஷமும் நிறைந்த ஒரு இராஜ்ஜியம்.

இரண்டாவது கேள்வி. இந்த இராஜ்ஜியத்திற்குள் எப்படி நுழைவது? *மறுபடியும் பிறப்பது*. இப்படி ஒரு இராஜ்ஜியம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். "எப்படி பிரதர் இந்த இராஜ்ஜியத்திற்குள் போவது?" என்று உடனே கேட்பீர்களா, கேட்கமாட்டீர்களா? இந்த இராஜ்ஜியத்திற்குள் எல்லாரும் போக முடியாது. இந்த இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கு முதலாவது ஒருவன் பாவ மன்னிப்பைப் பெற வேண்டும். இரண்டாவது அந்த இராஜ்ஜியத்தில் வாழ்வதற்கு ஒருவிதமான ஜீவனைப் பெற வேண்டும்.

தவளை தண்ணீரிலும் வாழும், நிலத்திலும் வாழும். மீன்கள் தண்ணீரில்தான் வாழும். மற்ற விலங்குகள், பூனை, எலி இவைகளெல்லாம் நிலத்தில்தான் வாழும். தவளை மிக ஆச்சரியமான விலங்கு. அது நிலத்தின் இராஜ்ஜியத்திலும் வாழ முடிகிறது. தண்ணீரின் இராஜ்ஜியத்திலும் வாழ முடிகிறது. அது எப்படி?

### பாவ மன்னிப்பும், நித்திய ஜீவனும் தேவை

இதேபோல ஒரு இராஜ்ஜியத்திலிருந்து இன்னொரு இராஜ்ஜியத்தில் வாழ வேண்டுமென்றால் அந்த இராஜ்ஜியத்திற்குரிய ஜீவன் வேண்டும். நான் இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்திலிருந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைய வேண்டுமென்றால் பாவ மன்னிப்பும், அந்த இராஜ்ஜியத்திற்குரிய ஒரு ஜீவனும் அவசியம். பாவ மன்னிப்பையும், நித்திய ஜீவனையும் தருகிறவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவரே. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எதற்காக வந்தாரென்றால் இப்படிப்பட்ட ஒரு தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதற்கு மனிதர்களுக்கு என்ன தேவை? பாவ மன்னிப்பு வேண்டும். அவர்களுடைய மனம் மாற வேண்டும்.

இப்போதெல்லாம் ஒருவன் இடம்பெயர்ந்து போகிறான் என்றால் அவனுடைய சரித்திரத்தை ஆதியோடந்தமாக அவர்கள் விசாரித்துவிடுவார்கள். எத்தனை தடவை அவர் குற்றங்கள் செய்திருக்கிறார்? அங்கு காவல் நிலையத்திலே ஏதாவது பதிவு இருக்கிறதா? பயங்கரவாத குழுக்களோடு இவருக்கு எதாவது தொடர்பு இருக்கிறதா? இவைகளையெல்லாம் அவர்கள் சோதித்துப் பார்த்துவிட்டுத்தான் அந்த இராஜ்ஜியத்திற்குள் அவனை விடுகிறார்கள். ஏனென்றால் இவருக்கு பயங்கரவாத குழுக்களோடு தொடர்பு இருக்கிறதென்றால் தங்கள் நாட்டிற்கு வந்து அவன் பல கேடுகளையும், துன்பத்தையும் விளைவிப்பான்.

"இவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை," என்று மாம்சத்தின் கிரியைகளைப்பற்றிய ஒரு பெரிய பட்டியலை பவுல் கலாத்தியர்களுக்கு எழுதிய நிருபத்தில் சொல்லுகிறார். எனவே, பாவங்களைச் செய்கிற ஒரு மனிதன், தன்னுடைய பாவங்களைச் சரிசெய்யாத ஒரு மனிதன், தேவனுடைய இராஜ்ஜியத்தில் நுழைய முடியாது. மனிதன் தான் செய்கிற எல்லாப் பாவங்களுக்கும் தேவனோடு அதைச் சரிசெய்துகொள்ள வேண்டும். மனிதன் தன்னுடைய பாவங்களைச் சரிசெய்துகொள்வதற்கு ஒரேவொரு வழிதான் உண்டு. பாவமில்லாத, குற்றமில்லாத ஒரு மனிதனுடைய இரத்தம் சிந்தப்பட வேண்டும். பாவமில்லாத, குற்றமில்லாத ஒரு மனிதன் இந்த மனித வரலாற்றிலே வாழ்ந்ததுண்டானால் அது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மட்டுமே. "என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?" என்று சவால் விட்ட ஒரே மனிதர் மனித வரலாற்றிலே இயேசுகிறிஸ்துதான். அவருடைய எதிரிகள் யாரும் "இதோ! நான் உம்மைக் குற்றப்படுத்துகிறேன்," என்று முன்வரவில்லை. நான் சவால் விட்டேன் என்று வைத்துக்கொள்வோமே. என்னைச்சுற்றி பத்து பேர் சொல்வார்கள். "என்ன? என்னில் பாவம் உண்டென்று என்றால் உன் கதையை நான் சொல்கிறேன்," என்று சொல்வார்கள். இயேசுகிறிஸ்துவினுடைய எதிரிகள் உடனே அவர்கள் குதித்தெழுந்து, "உம்முடைய பாவத்தை நாங்கள் சொல்கிறோம" என்று சொல்லியிருக்க வேண்டுமே! ஒரு மனிதன்கூட அவரிடத்தில் சொல்லவில்லை.

இன்றைக்கு நம்முடைய சந்நியாசிகள், சாமியார்கள், குருக்கள், யோகிகள் யாராவது அப்படி ஊடகத்திற்கு முன்னால் வந்து நின்று, "என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?" என்று சொல்ல முடியுமா? நான் பிறந்ததுமுதல், நான் பிறந்த கிராமத்திலிருந்து

வளர்ந்த கிராமம்வரை, நான் வேலைசெய்த இடம், என்னுடைய மனைவி, மக்கள், நான் பழகின நண்பர்கள் எல்லாரையும் விசாரிக்க வேண்டும். “என்னில் பாவம் உண்டென்று உங்களில் யாராவது சொல்ல முடியுமா?” என்று குருக்கள், யோகிகள், சாமியார்கள், சந்நியாசிகள் சொல்ல முடியுமா?

ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அப்படிப்பட்ட ஒரு சவாலை விட்டார். அவரை முழுவது மாக விசாரித்த பிலாத்து என்கிற ஆளுநர், “நான் இந்த மனிதனிடத்தில் எந்தக் குற்றமும் காணேன்,” என்று சொல்கிறார்.

ஆகவே, மனித வரலாற்றிலே குற்றமில்லாத, பாவமில்லாத ஒரு நபர், வெறுமனே பாவமில்லாத ஒரு நபரல்ல, பாவத்தின் சுவடுகூட இல்லாத மனிதர். எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாத மனிதன். அவருடைய இரத்தத்தினால் மட்டுமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படு கின்றன. பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு பாவமற்ற ஒரு மனித இரத்தம் சிந்தப்பட வேண்டும். இதுதான் நற்செய்தி. ஒரு நீதிபதியினுடைய மகன் பாவம் செய்துவிட்டான் என்று வைத்துக்கொள் வோம். தன்னுடைய மகன் என்பதற்காக நீதிபதி “போ, போ. உன்னுடைய குற்றங்களையெல்லாம் மன்னித்துவிட்டேன்,” என்று சொல்லிவிட முடியுமா? சொல்ல முடியாது. இன்னும் சொல்லப்போனால் அவன் நீதிபதியினுடைய மகன் என்பதால்தான் இப்போது எப்படி அவர் தீர்ப்பளிக்கப்போகிறார் என்று நன்றாக ஊன்றிக் கவனிப்பார்கள்.

ஆகவே, கடவுள் கண்ணை மூடிக்கொண்டு, “பரவாயில்லை, போ; உன் பாவங்களையெல்லாம் மன் னித்துவிட்டேன்,” என்று சொல்வது இல்லை. கடவுளுடைய சட்டத்தின்படி ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால் குற்றமற்ற, பாவமில்லாத ஒரு மனித இரத்தம் சிந்தப்பட வேண் டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். “இப்படி அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது” *(எபே. 2:7).*

அது மட்டுமல்ல. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் ஒரு புதிய ஜீவனைத் தருவதாக வாக்களித்தார். “அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனை பேர்களுக்கும் தேவனுடைய பிள்ளைகளாகும் படிக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது, புருஷ சித்தத்தினாலாவது, மாம்சத் தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்” *(யோவான் 1:12)* என்று வாசிக்கிறோம். அதே போல் அவரை விசாரிக்க வந்த நிக்கொதேமு என்ற மனிதனிடம், “ஒருவன் மறுபடியும் பிறவாவிட் டால், புதிதாய்ப் பிறவாவிட்டால், பரத்திலிருருந்து பிறவாவிட்டால், பரம இராஜ்ஜியத்திற்குள் (அல் லது தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்) அவன் நுழைய முடியாது. நுழைய மாட்டான்,” என்று சொன்னார். ஒருவன் பரலோக இராஜ்ஜியத்திற்குள் நுழைய வேண்டுமென்றால் பரலோக இராஜ் ஜியத்திற்குரிய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தண்ணீரின் இராஜ்ஜியத்தில் நுழைந்து வாழ வேண்டுமென்றால் தண்ணீரின் இராஜ்ஜியத்தில் வாழ்வதற்குரிய ஒரு ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நாம் செத்துப்போவோம். மூச்சுமுட்டி, மூச்சுத்திணறி செத்துப் போவோம்.

ஆகவே, தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கு இரண்டு வேண்டும்: ஒன்று பாவமன்னிப்பு, இன்னொன்று நித்தியஜீவன். நித்தியஜீவன் என்பது அந்த இராஜ்ஜியத்திற்குரிய ஜீவன்.

**தன்னிகரற்ற இயேசுவே வாசல், மேய்ச்சல்**

இந்த இரண்டையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனிதனுக்குக் கொண்டுவந்தார். தேவன் நமக்கு ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே சாட்சியாம். ஆகவேதான், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, “நானே வாசல், ஒருவன் வாசல்வழியாய் உட்பிர வேசித்தால் உள்ளும், புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்,” *(யோவான் 10:9)* என்று சொன்னார். இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்திலிருந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைய வேண்டுமென்றால் ஒரு வாசல் வேண்டும். யார்தான் அந்த வாசல்? இயேசுகிறிஸ்துவே அந்த வாசல். “ஒருவன் என் வழியாய் நுழைந்தால் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடை வான்”. மேய்ச்சல் என்றால் மிகவும் வளமான, செழிப்பான வாழ்க்கைக்குள் அவன் நுழைய முடியும் என்று பொருள்.

பாவம், அக்கிரமம், மீறுதல், குழப்பங்கள், சிக்கல்கள், இருள் நிறைந்த ஒரு வாழ்க்கைக்குள் மனி தர்கள் வாழ வேண்டும்? “நீங்கள் அப்பமல்லாததற்காக உங்கள் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்?” *(ஏசாயா 55:2).* உங்கள் பிரயாசம் பூமிக்குரிய இராஜ்ஜியத்திலே உங்களைத் திருப்திசெய்யாது. எது அப்பம் என்று நினைத்து நம்

முடைய பணத்தையெல்லாம், நம்முடைய முயற்சியையெல்லாம், நம்முடைய உழைப்பையெல்லாம், நம்முடைய தொழுகையையெல்லாம், நம்முடைய வழிபாடுகளையெல்லாம் செலவிடுகிறோமோ அது நம்மைத் திருப்திசெய்யாது. அது அப்பமல்ல.

ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்வழியாகத் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழையும் போது அவன் உள்ளும், புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான். "திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ என் ஆடுகள் ஜீவனைப் பெறவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10:10) என்று அவர் சொல்கிறார்.

இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்திலே மேய்ப்பர்கள் உண்டு, அரசர்கள் உண்டு, இராஜாக்கள் உண்டு. ஆனால், அவர்களுடைய முடிவு என்னவென்றால் "திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவுமே வருகிறான்". அவர்களை அந்த இராஜ்ஜியத்தில் வைத்திருந்து, அந்த இராஜ்ஜியத்தின் வழிகளிலே வாழச்செய்து முடிவிலே அந்த மனித வாழ்க்கை திருப்தியில்லாத வாழ்க்கையாக முடிவடையும். நீங்கள் குறித்து வைத்துக்கொள்ளலாம். நான் உங்களை அச்சுறுத்துவதாக நினைக்க வேண்டாம்.

நான் பெரிய குருவல்ல. ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மாபெரும் குரு, தன்னிகரற்ற குரு, ஒப்புயர்வில்லாத குரு, இந்த நபருக்கு மிஞ்சின ஒரு குரு, போதகன், ஓர் ஆசாரியன், ஓர் ஆசிரியன், ஓர் ஆசான் இந்த உலகத்திலே வாழ்ந்ததில்லை. இது அவருடைய வாக்கு. "இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்திலே இப்படி இந்த உணவைப் பெறலாம்; இப்படி அந்த உடையைப் பெறலாம்; இப்படி அந்த உறைவிடம் பெறலாம். இப்படி அந்த நன்மையைப் பெறலாம்," என்று நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கை உங்களைத் திருப்தி செய்யாது. மாறாக, அது உங்களைக் கொல்லும், அழிக்கும். "திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்". ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்வழியாக, அவரை வாசலாய்க்கொண்டு தேவ னுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசித்தால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற வாழ்க்கை, ஜீவ னுள்ள வாழ்க்கையாக, பரிபூரண ஜீவனை தருகின்ற வாழ்க்கையாக இருக்கும் என்று அவர் சொல் கிறார். பரிபூரண ஜீவன் என்றால் உண்மையிலேயே ஒரு நிறைவான வாழ்க்கையை, ஒரு திருப்தி யான வாழ்க்கையை, தருகின்ற நிறைவும், திருப்தியும் உள்ள ஒரு வாழ்க்கை.

ஆகவே நான் பகிர்ந்துகொண்டதை சுருக்கமாக மீண்டும் சொல்கிறேன். இயேசுகிறிஸ்துவை விசு வாசிக்கிறவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறார்கள்? இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்றார்கள். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதற்காக நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறோம், அவரைப் பின்பற்றுகிறோம்.

### தேவன் நம் அன்பின் தந்தை

உங்கள் மனதிலே நீங்கள் பதித்துக்கொள்வதற்காக மூன்று குறிப்புகளைச் சொல்கிறேன். முதலாவது, *தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற வாழ்க்கை தேவனை நம்முடைய தந்தையாக, நம்முடைய பிதாவாக, நம்முடைய தகப்பனாய்க்கொண்டு அவருடைய அன்பின் பராமரிப்பின்கீழ் வாழ்கின்ற வாழ்க்கை.* நமக்கு அங்கு பொறுப்புகள் உண்டு. வேலை உண்டு. தொழில் உண்டு. ஆனால் அங்கு என்ன இல்லை? சந்தேகம் இல்லை, பயமில்லை, பதற்றமில்லை, திகில் இல்லை, எதிர்காலத்தைப் பற்றிய அச்சங்கள் இல்லை. புல் எப்படி வாழ்கின்றது? பறவைகள் எப்படி வாழ்கின்றன? இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற தேவனுடைய மக்கள் இயேசுகிறிஸ்துவின் சீடர்கள், அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

### தேவனுடைய இராஜ்ஜியத்தில் நுழைய பாவமன்னிப்பும், நித்திய ஜீவனும் தேவை

இரண்டாவது, இந்த தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கு பாவமன்னிப்பும், நித்திய ஜீவ னும் அவசியம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனிதனுடைய பாவமன்னிப்புக்காக பாவமில்லாத தம் இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார். மனிதனுக்கு நித்திய ஜீவனைத் தருகிறவர் இயேசுகிறிஸ்து ஒருவரே. அவர் ஒருவரில் மட்டும்தான் அந்த நித்திய ஜீவன் உள்ளது. பாவ மன்னிப்பையும், நித்திய ஜீவனையும் பெறும்போது இந்த தேவனுடைய இராஜ்ஜியத்தில் நுழைகின்றோம். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்றோம்.

### பரலோக இராஜ்ஜியத்தின் வாழ்க்கை பரிபூரணமானது

மூன்றாவது சொன்னேன் எச்சரிப்பாகவும், உங்களை ஊக்குவிப்பதற்காகவும். இந்தப் பூமிக்குரிய இராஜ்ஜியத்திலே நாம் வாழ்கின்ற வாழ்க்கை, அது அப்பம் அல்லாததற்காக நாம் செலவிடுகின்ற

பணம்; திருப்திசெய்யாத பொருளுக்காக நாம் படுகின்ற பிரயாசம். அந்த வாழ்க்கையின் முடிவு திருப்தியாக இருக்காது. ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரைப் பின் பற்றி தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற வாழ்க்கை நம்மைத் திருப்திசெய்கின்ற ஒரு வாழ்க்கை. அப்படிப்பட்ட வாழ்க்கையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து காண்பித்தார். “என் ஆடு களுக்கு நான் ஜீவனைக் கொடுப்பேன். அது மட்டுமல்ல பரிபூரணமான, நிறைவான, திருப்தியான ஜீவனைக் கொடுப்பேன்,” என்று இப்படிபட்ட வாழ்க்கை வாழுமாறு ஒரு அழைப்பு நமக்குக் கொடுக் கப்பட்டிருக்கிறது. இந்த அழைப்பைத் தட்டுவது ஞானமல்ல. நீங்கள் உங்கள் இருதயங்களிலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தருகின்ற பாவமன்னிப்பை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பார், உங்களுக்கு நித்திய ஜீவனைத் தருவார். அவர் தருகின்ற பாவ மன்னிப்பையும், நித்தியஜீவனையும் பெற்று வாழ்கின்ற வாழ்க்கை பரிபூரணமான வாழ்க்கை, நிறை வான வாழ்க்கை, திருப்தியான வாழ்க்கை, தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கின்ற வாழ்க்கை, இந்தப் பூமியிலே கிடைக்காத நன்மைகளும், ஆசீர்வாதங்களும் நிறைவும் உள்ள வாழ்க்கை. இந்த வாழ்க்கையை நீங்கள் தவற விட்டுவிடாதீர்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.